Judicial Form No. 53

(see Rule 42)

Deposition of the Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.

CC No.357/2023 Date: 06.07.2026

Deposition of witness for prosecution: PW1 – நித்யா

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி M.P.No.4/2026 மனுவின் மீது அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1.) ஆஜர் எதிரியை 8 வருடங்களாக தெரியும். எனது கணவர் கேரளாவிற்கு வேலைக்கு சென்று வருவார். எனது கணவர் கொத்தனார் வேலை செய்து வந்தார் என்றால் இல்லை. எனது கணவருக்கு மது பழக்கம் உள்ளது என்றால் இல்லை. எனது கணவருக்கு உள்ள மது பழக்கத்தை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வெளியில் உள்ள வரவு செலவுகள் குறித்த முழு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனது கணவருக்கும் இடையயான வரவு செலவு விபரத்தை என்னிடம் சொன்னாற என்றால் அவ்வாறு வரவு செலவு இல்லை. வரவு செலவு அடிப்படையில் எனது கணவருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் இல்லை. முன்விரோதம் இருந்த தன் அடிப்படையில் எதிரியுடன் ஏற்பட்ட பிரச்சனையின் விபரம் தெரியுமா என்றால் அவ்வாறு பிரச்சனை இல்லை, எதிரி தான் என்னை தேவையில்லாமல் பின் தொடர்ந்து தொல்லையளித்தார். வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் எனது கணவர் பெற்று இருந்த கடனிற்கு ஏற்பட்ட பிரச்சனையின் அடிப்படையில் என் மூலம் எதிரி மீது பொய் புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான். சம்பவத்திற்கு மறு தினம் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல, சம்பவதன்றே புகார் அளிக்கப்பட்டது. சம்பவதன்று அளித்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் மறுநாள் விசாரணைக்கு அழைத்து இருந்தார்கள் சென்றோம். புகார் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை சுற்றி அதிகமான வீடுகள் உள்ளன என்றால் டீக்கடையும் 3 வீடுகள் உள்ளன. சம்பவ இடத்தின் அருகே ஆடு மேய்பதற்கு உரிய வசதியுள்ள இடம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் வாங்கிய கடனை தவிற்கும் பொருட்டு எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53

(see Rule 42)

Deposition of the Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.

CC No.357/2023 Date: 06.07.2026

Deposition of witness for prosecution: PW3 – வனிதா

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி M.P.No.4/2026 மனுவின் மீது அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1.) அ.சா.1 என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். அ.சா.1ன் கணவர் பாண்டியனுக்கும் எதிரிக்கும் இடையே இருந்த பழக்க வழக்கம் பற்றி எனக்கு தெரியாது என்றால், அவ்வாறு பழக்க வழக்கம் இல்லை. அ.சா.1ன் கணவர் பாண்டியனின் வரவு செலவு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1ன் கணவர் எதிரியிடம் கடன் பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1ன் கணவர் எதிரியிடம் வாங்கிய கடனை தவிற்கும் பொருட்டு அ.சா.1 அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் அளித்த விபரம் எப்பொழுது எனக்கு தெரியவந்தது என்றால், புகார் அளிக்க நானும் உடன் சென்று இருந்தேன். புகார் அளிக்கப்பட்ட தினத்தன்று எதிரி விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். புகார் அளிக்கப்பட்ட தினமே எங்களையும் விசாரித்தார்கள். விசாரணையின் போது எதிரியிடம் வாங்கிய கடனை எத்தனை நாட்களில் திரும்ப கொடுப்பதாக அ.சா.1ன் கணவர் சொன்னார் என்றால், அவ்வாறு கடன் பெறவில்லை. சம்பவதன்றே புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது உடன் பிறந்த சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று புகார் அளிக்கப்பட்டு அன்றைய தினமே விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றாலும் அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.